கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 28.03.2013

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
சுபீட்சம்
காத்தான்குடி இன்போ
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (82)

82.மக்கள் மீதான அழிவுகளின் மீதே பாசிச இயந்திரம் கட்டமைக்கப்படுகிறது!

புலிகளினால் நடாத்தப்பட்ட சித்திரவதை முகாம்களில் மிகப்பெரியது துணுக்காயில் புலிகள் வைத்திருந்த முகாமாகும். இந்த முகாம் இந்திய அமைதிப்படை 1990இல் இலங்கையைவிட்டு ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசால் வெளியேற்றப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்டதாகும்.

1977இல் பிரதமராகப் பதவியேற்றுப் பின்னர் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க அரசாங்கம் செய்து கொண்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் மூலம் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட இந்திய அமைதிப்படையை, அதே அரசில் அப்போது பிரதமராக இருந்து கொண்டு அந்த ஒப்பந்தத்தை எதிர்த்த பிரேமதாச, தான் 1990இல் ஜனாதிபதியானதும் ஒருதலைப்பட்சமாக வெளியேற்றினார்.

இந்திய அமைதிப்படையை வெளியேற்றுவதற்காக பிரேமதாச புலிகளுடன் கூட்டுச் சேர்ந்த விடயம் இன்று வரலாற்று ஏடுகளில் சரித்திரமாகிவிட்டது. இந்திய அமைதிப்படையை முல்லைத்தீவுக் காடுகளில் இருந்துகொண்டு எதிர்த்துப் போராடுவதற்காக, பிரேமதாச புலிகளுக்கு ஆயுதங்களும், உணவுப் பொருட்களும், பணமும், பதுங்கு குழிகள் அமைக்க சீமெந்து மற்றும் இரும்புக் கம்பிகள் போன்றவையும் வழங்கியதுடன், சமாதான புறாவாக வேசம் போட்டு புலிகளின் பிரதிநிதிகளைக் கொழும்புக்கு அழைத்து, ஐந்து நட்சத்திர விடுதிகளில் வைத்துப் பேச்சுவார்த்தையும் நடாத்தினார்.

பிரேமதாசவின் முழு நோக்கமும் இந்தியாவின் பெரும் பிரயத்தனத்தின் மூலம் அமைந்த ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணசபையை புலிகளின் ஒத்துழைப்புடன் இல்லாதொழித்து, தமிழ் மக்களுக்கு அவர்களது சொந்தப் பிராந்தியத்தில் ஒரு அதிகாரக் கட்டமைப்பு உருவாவதைத் தடுப்பதே. இந்தத் திட்டமிட்ட சூழ்ச்சிக்கு அதிகார வெறி கொண்ட பிரபாகரனும் அவரது கூட்டமும் துணைபோய், தமிழ் மக்களுக்குப் பெரும் வரலாற்றுத் துரோகம் இழைத்தனர். அதற்குப் பிரதி உபகாரமாக பிரேமதாச மிக இலகுவாக வடக்குக் கிழக்கு மாகாணசபையைக் கலைத்து, இந்திய அமைதிப்படையையும் திருப்பி அனுப்பினார்.

இந்த விடயத்தில் பிரேமதாசவும் புலிகளும் 'ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி, அதன் பின்னர் நீ யாரோ நான் யாரோ' என்ற விளையாட்டைத் தெரிந்துகொண்டே விளையாடினார்கள். பிரேமதாசவின் அந்தரங்க நோக்கம் புலிகளைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கு மாகாணசபையை இல்லாமல் செய்து, இந்திய அமைதிப் படையையும் திருப்பி அனுப்பிய பின்னர், தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி புலிகளை அழிப்பதற்கு வியூகம் அமைப்பதாகும். புலிகளின் திட்டம் பிரேமதாசவைப் பயன்படுத்தி தமது கதையைப் படிப்படியாக முடித்து வந்த இந்திய அமைதிப்படையை வடக்கு கிழக்கில் இருந்து வெளியேற்றுவதுடன், இந்திய அரசின் உதவியுடன் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணசபையையும் இல்லாதொழிப்பதாகும்.

இருபகுதியினரும் தத்தமது நோக்கங்களில் வெற்றி பெற்றார்கள் என்றுதான் கூற வேண்டும். ஆனால் தன்னை 'விண்ணாதி விண்ணன்' என்று எப்பொழுதும் நினைத்து வந்த பிரேமதாச, புலிகளின் நயவஞ்சக வலையில் சிக்கி, புலிகள் திட்டமிட்டு அனுப்பிய மனித வெடிகுண்டுக்கு இரையாகிய பரிதாப நிலையை இறுதியில் அடைந்தார். இந்த விடயத்தில் புலிகள், புலிகளது வழமையான பாணியில் முந்திக் கொண்டதுமல்லாமல், பிரேமதாசவையும் பலியெடுத்துவிட்டார்கள்.

1990 ஆண்டில் உண்மையில் பிரேமதாச இந்திய அமைதிப்படையை முட்டாள்தனமாகத் திருப்பி அனுப்பாமல் விட்டிருந்தால், புலிகளை முற்றுமுழுதாக அழிப்பதற்கு அதன் பின்னரான 19 வருடங்களையும், ஒரு மகிந்த ராஜபக்சவின் வருகையையும் எதிர்பார்த்துக் காத்திருந்திருக்கத் தேவையில்லை. இந்திய அமைதிப்படையினர் 1990 ஆண்டில் முல்லைத்தீவு நித்திகைக்குளம் காட்டுக்குள்ளேயே புலிகளின் கதையை முடித்திருப்பார்கள்.

சில விடயங்களில் முந்திக் கொள்பவனே வெற்றிவாகை சூடிக் கொள்கிறான் என்ற உண்மை, பல தடவைகள் வரலாற்றில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பிரேமதாசவின் கொலை இதற்கு ஒர் உதாரணம். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்ததை இன்னொரு உதாரணமாகக் கூறலாம்.

1987இல் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் இந்திய - இலங்கை உடன்படிக்கையைச் செய்வதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பு வருகை தந்த சமயத்தில், அவருக்கு அளிக்கப்பட்ட இராணுவ அணிவகுப்பு மரியாதையின் போது, கடற்படை வீரன் ஒருவன் அவரைத் துப்பாக்கிப் பிடியால் தாக்கிக் கொலை செய்த முயன்றபோது, அவர் தனது புத்திசாதுரியத்தினால் தன்னைத் தற்காத்துக் கொண்டார். அந்தச் சிங்களக் கடற்படை வீரன் முயன்று தோற்ற விடயத்தைப் பின்னர் (21.05.1991) புலிகள் இந்திய மண்ணில் வைத்து - அதுவும் தமிழ்நாட்டில் வைத்து - ஒரு பெண்

டான் யாழ்ஒளி
Live from Europe



புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்

புலம்பெயர் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் தங்களை மனித உரிமைக் காவலர்களைப்போல் காட்டிக்கொள்கிறார்கள்.

கதம்பமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை: கலக்கமான இலங்கைத் தமிழரின் அரசியல் எதிர்காலம்

அரசியல் தீர்வைப் பின்தள்ளும் பிழையான மூலோபாயம்

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பூட்டும் பிரச்சாரத்தை நிறுத்துங்கள்

Thendral Radio

மனித வெடிகுண்டின் மூலம் நிறைவேற்றி அவரது உயிரையும் மாய்த்துவிட்டார்கள்.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒன்று உள்ளது. புலிகளால் கொல்லப்பட்ட இந்த முக்கியமான இரண்டு அரச தலைவர்களும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையில் எதிரும் புதிருமானவர்கள்.

ஒருவர், அதாவது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்காக, அதேநேரத்தில் பிரேமதாசவினாலும் புலிகளினாலும் வெறுக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர். அவரையும் புலிகள் கொலை செய்தனர்.

இன்னொருவர், அதாவது இலங்கை பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் இருந்த ஆர்.பிரேமதாச சிங்களப் பேரினவாதி. அவருடன் புலிகள் கூட்டு வைத்து, வடக்கு கிழக்கு மாகாணசபையை அவர் மூலம் இல்லாமல் செய்து, தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டு, அவரையும் புலிகள் பின்னர் 'போட்டுத்தள்ளி' விட்டார்கள்.

இந்த விடயத்தில் பிரேமதாச போல, ராஜீவ் காந்தியும் புலிகளிடம் ஏமாந்துவிட்டதாகவே அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. இந்திய அமைதிப்படை புலிகளுக்கு எதிராக எடுத்த இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, புலிகளின் கட்டமைப்பு முற்றாக நொருக்கப்பட்டு, பிரபாகரன் உள்ளிட்ட புலிகளின் முக்கிய தலைவர்கள் சுமார் 200 பேர் அடங்கிய குழுவொன்றை, இந்திய அமைதிப்படை முல்லைத்தீவு நித்திகைக்குளம் காட்டுப் பகுதியில் சுற்றி வளைத்திருந்தது.

இந்த நிலைமையில் புலிகளின் தலைவர்களை உயிருடன் கைது செய்வதா அல்லது கொல்வதா என்ற இறுதி நடவடிக்கையை மேற்கொள்வதற்காக, இலங்கையிலிருந்த அமைதிப்படையின் உயர்பீடம் (அது பெரும்பாலும் இந்திய அமைதிப்படையின் தளபதியாக இருந்த ஜெனரல் கல்கத் எனப் பலராலும் ஊகிக்கப்படுகிறது) இந்திய அரசின் தலைமையுடன் (பிரதமர் ராஜீவ் காந்தி எனக் கூறப்படுவதுண்டு) கலந்தாலோசித்ததாகவும், புலிகளைக் கொல்லாமல் தப்பிப் போவதற்கு அனுமதிக்கும்படி புதுடில்லியிலிருந்து ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த விடயம் எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லையாயினும், பிற்காலத்தில் இந்திய அமைதிப்படையில் இலங்கையில் பணியாற்றிய சில அதிகாரிகள் எழுதி வெளியிட்ட நூல்களை வாசிக்கையில், இந்த மாதிரியான ஒரு சம்பவம் நடந்ததிற்கான சாத்தியங்கள் இருக்கின்றது.

இந்திரா காந்தியின் காலத்திலும் சரி, அவரது மகன் ராஜீவ் காந்தியின் காலத்திலும் சரி, இலங்கையில் இந்தியா தலையீடுகளை மேற்கொண்டதற்குத் தமிழர் பிரச்சினை மட்டும் ஒரு காரணம் அல்ல. குறிப்பாக, அமெரிக்காவுக்கும் ஏனைய மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் ஆதரவான ஐ.தே.க அரசாங்க காலங்களிலேயே, இந்தியா இலங்கையில் அதிக தலையீடுகளைச் செய்திருக்கிறது. அதற்கொரு காரணம், தனக்கு மிகமிக அருகிலுள்ள தென்பக்கக் கோடிக்குள் தனக்கு விரோதமான சக்திகள் காலுன்ற விடக்கூடாது என்பதுதான்.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆரம்பத்தில் அது புலிகள் மீது விரோதமான நிலைப்பாடு எதனையும் கொண்டிருக்கவில்லை. பின்னர் புலிகள் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுடனும், பிரேமதாச அரசுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்த போதிலும், இந்தியா புலிகளை முற்றுமுழுதாகக் கைகழுவி விடும் எண்ணத்துடன் செயல்படவில்லை. புலிகளைக் கட்டுக்குள் கொண்டுவரும் அதேவேளையில், இலங்கையில் இருந்த ஐ.தே.க அரசையும் கட்டுக்குள் வைத்திருக்கவே இந்தியா விரும்பியது. அதனாலேயே புலிகள் இந்தியாவுக்கு எதிராகச் செயல்பட்ட போதிலும், இந்தியா விட்டுக் கொடுப்புடனேயே நடந்து கொண்டது. அதன் ஒர் அங்கமாகவே முல்லைத்தீவு நித்திகைக்குளம் காட்டுக்குள் இந்திய அமைதிப்படையிடம் சிக்கிய புலித் தலைவர்களை இந்தியா 'தந்திரோபாயம்' எனக் கருதித் தப்பிப்போக விட்டிருக்கலாம்.

ஆனால் புலிகளுக்கு இந்தியாவின் பூகோள அரசியல் பற்றியோ, அல்லது இந்தியாவின் இலங்கை குறித்த தந்திரோபாயங்கள் குறித்தோ, எந்தவிதமான புரிந்துணர்வும், முக்கியமாக அக்கறையும் இருக்கவில்லை. குறிப்பாகப் புலிகளின் தலைவர் பிபாகரனைப் பொறுத்தவரை, ஒர் ஆரம்பப் பாடசாலை மாணவனுக்கு இருக்கும் 'எனக்கு அடித்தவனைத் திருப்பி அடிக்காமல் விட மாட்டேன்' என்ற மனோபாவமே மேலோங்கியிருந்தது. அதைப் புரிந்து கொள்ளாததால்தான், இந்தியா அநியாயமாக ராஜீவ் காந்தியை புலிகளிடம் பலி கொடுக்க வேண்டி வந்தது.

இந்த விடயங்களை இங்கு நான் விவரிப்பதற்குச் சில காரணங்கள் உண்டு. புலிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் போராடுபவர்கள்; எனத் தம்மைச் சொல்லிக் கொண்டாலும், புலிகள் நடைமுறையில் வரலாறு முழுவதும் தமிழ் மக்களுக்கு தீங்கையே விளைவித்து வந்துள்ளார்கள்.

முதலில் ஜே.ஆர். தலைமையில் உருவான சிங்கள இனவெறி அரசுக்கெதிராகப் போராடப் புறப்பட்ட ஏனைய தமிழ் போராளிக் குழுக்களை அழித்து, தமிழ் மக்களின் போராட்ட சக்தியைப் பலவீனப்படுத்தினார்கள். பின்னர் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் தலைமைகள், புலமைசார் அறிஞர்கள், சிறந்த நிர்வாகிகள் என எல்லோரையும் அழித்தொழித்தார்கள். ஜே.ஆர். அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை கட்டுக்குள் கொண்டு வந்த இந்திய அமைதிப்படையுடன் போர் புரிந்தார்கள். அதன் பின்னர் எதிரியுடன் சேர்ந்து, தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமான இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையை இல்லாதொழித்தார்கள். (அதை இல்லாதொழித்துவிட்டு, இன்று புலிகளின் வாரிசுகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர், பிரித்த மாகாணசபைக்காவது அதிகாரம் தாருங்கள் என்று கெஞ்சித் திரியும் நிலையில் இருக்கின்றனர்)

பின்னர் இலங்கைத் தமிழர்களுக்கு (சுய லாபம் இருந்தபோதிலும்) எப்பொழுதும் பக்கபலமாக இருந்து வந்த இந்தியாவின் ஒரு மதிப்புக்குரிய தலைவரை, நேருவின் பேரன் பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழக மண்ணிலேயே வைத்துப் படுகொலை செய்தனர். இவைகள் எல்லாம் இரத்தக் காட்டேரிகளான புலிகள் எதிரியை அழிப்பதாகச் சொல்லிக்கொண்டு, இலங்கைத் தமிழினத்துக்கு எதிராகச் செய்த வேலைகள். அத்துடன் புலிகள் நின்றுவிடவில்லை.

1990இல் இந்திய அமைதிப்படை பிரேமதாச அரசினால் திருப்பி அனுப்பப்பட்டதும், புலிகள் உடனடியாகவே வடக்கு கிழக்கு முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டனர். அதன் பின்னர் வடக்கு கிழக்கில் தமது 'வேட்டை'யை ஆரம்பித்தனர். இந்திய அமைதிப்படை வருவதற்கு முன்னரும் புலிகளிடம் பலமான ஒரு புலனாய்வு அமைப்பு இருந்தது உண்மையாயினும், இந்திய அமைதிப்படை வந்து போனபின்னரே அதை மிகவும் ஒழுங்குபடுத்தி ஒரு பாசிச இயந்திரத்தை உருவாக்குவதற்கான கருவியாக அதைக் கட்டமைத்தனர். திட்டமிட்ட வகையில் புலிகள் மேற்கொண்ட இந்த நடவடிக்கை குறித்து, நான் புலிகளது வதைமுகாம் கைதியாக இருந்தபோது என்னுடன் கதைத்த சில புலனாய்வாளர்கள் மூலம் அறிய முடிந்தது.

முதலில் இருந்த புலிகளின் புலனாய்வு அமைப்பு, மாற்று இயக்கப் போராளிகளையும், அரச உளவாளிகள் எனக் கருதப்படுவோரையும், தமக்கு எதிராகச் செயல்படுவோர்களையும் மோப்பம் பிடித்து, அவர்களை ஒழித்துக் கட்டுவதிலேயே கவனம் செலுத்தியது. ஆனால் இந்திய அமைதிப்படையுடனான யுத்தத்தின் பின்னர், புலிகளின் ஏக அதிகாரம் வடக்கு கிழக்கில் நிறுவப்பட்ட பின்னர், புலிகள் தமிழ் சமூகத்தை முழுவதுமாகச் சுத்திகரிக்கும் ஒரு முடிவை எடுத்துவிட்டார்கள்.

அதன் விளைவாக புலிகள் தமிழ் பகுதிகளில் பரவலான கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு, பல்லாயிரக்கணக்கானவர்களைக் கைது செய்ததுடன், சிறைக்கூடங்களையும் சித்திரவதை முகாம்களையும் நிறுவத் தொடங்கினர். அப்படி முதலில் அமைக்கப்பட்ட மிகப்பெரிய முகாமே துணுக்காயில் புலிகள் அமைத்த சித்திரவதை முகாம். இங்கே சுமார் 4,000 பேர் வரை மிகவும் மோசமான நிலைமைகளில் தடுத்து வைக்கப்பட்டு, சித்திவதை செய்யப்பட்டனர். இந்தக் கைதிகளில், வெறுமனே 18 பேர்கள் மட்டுமே தப்பிப் பிழைத்தவர்கள் எனத் தெரிய வருகிறது.

துணுக்காய் சித்திரவதை முகாம் குறித்து, சர்வதேச மனித உரிமை அமைப்பு ஒன்றின் பிரதிநிதி ஒருவர் தனிப்பட்ட முறையில் இலங்கையிலுள்ள மனித உரிமை அமைப்பு ஒன்றின் பிரதிநிதிகளிடம் கூறிய கருத்தை இங்கு தெரியப்படுத்துவது முக்கியமானது.

தொடரும்

முன்னைய பதிவுகள்